**தலைப்பு – 101 புத்தசாசன அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 101- புத்தசாசன அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், புத்தகங்கள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு, இணைக்கக்கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 ஜுலை 04 ஆம் திகதி அமைச்சின் செயலாளரிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.2 கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணைக்கக்கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணைக்கக்கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 2 கணக்குகள்

---

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

---

**மொத்த நிதிஏற்பாடும் செலவும்**

---

அமைச்சிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 832.3 மில்லியனாக இருந்ததுடன், அதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 799.7 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அமைச்சிற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாட்டில் ரூபா 32.6 மில்லியன் அதாவது, 4 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| தலைப்பு | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | **தேறிய நிதியேற்பாடு** | **பயன்பாடு** | **சேமிப்புக்கள்** | |
| | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | |
| மீண்டெழும் | 179.5 | 159.2 | 20.3 | 11.3 |
| மூலதனம் | 652.8 | 640.5 | 12.3 | 1.9 |
| மொத்தம் | 832.3 | 799.7 | 32.6 | **3.9** |

## 2.2. அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

### பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

அமைச்சிற்குரிய 10101 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரச உத்தியோகத்தர்களுக்குரிய முற்பணக் கணக்குகள் தொடர்பாக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளவாறான பெறுமதிகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| <u>செலவினம்</u> | | <u>பெறுவனவுகள்</u> | | <u>வரவு மீதிகள்</u> | |
|---|---|---|---|---|---|
| **ஆகக்கூடிய எல்லை** | **உள்ளவாறானது** | **ஆகக்குறைந்த எல்லை** | **உள்ளவாறானது** | **ஆகக்கூடிய எல்லை** | **உள்ளவாறானது** |
| **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
| 6.85 | 4.46 | 3.25 | 3.87 | 23.00 | 12.25 |

## 2.3 பொது வைப்புக் கணக்குகள்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சின் கீழுள்ள வைப்புக் கணக்குகளின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 26.95 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0002/0058/000 | 0.17 |
| 6000/0000/00/0016/0013/000 | 24.03 |
| 6000/0000/00/0018/0013/000 | 2.75 |
| | ---------- |
| | 26.95 |
| | ====== |

## 2.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

புத்தசாசன அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன மேலே 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட்டு திருப்திகரமாக தயாரிக்கப்பட்டிருந்தன. அம்முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# 3. பொருண்மையான மற்றும் முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

## 3.1 ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்படாமை

அமைச்சினால் கீழே காட்டப்பட்டுள்ள ஏடுகள் பேணப்படாமல் இருந்தன.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ஆ) | கணனிப் பாகங்கள் மற்றும் மென்பொருள்கள் தொடர்பான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |

## 3.2 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளித்தல்

அமைச்சிற்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்டிருந்த 04 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு 2016 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்காததுடன், அந்த ஐயவினாக்களுக்குரிய கணக்கிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 10,115,163 ஆக இருந்தது.

### 3.3 ஒதுக்கீட்டுக் கணக்கு

16 செலவின விடயங்களுக்காக மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டதால் அந் நிதிஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு தேறிய நிதியேற்பாட்டில் 24 சதவீதம் முதல் 88 சதவீதம் அளவிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

### 3.4 பொது வைப்புக் கணக்கு

2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் ரூபா 13,456,326 கூட்டுத்தொகையான 13 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

10101 ஆம் விடய இலக்க அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் சேவையை விட்டுச் சென்ற மற்றும் வேறு சேவைகளுக்கு விடுவிக்கப்பட்ட இரண்டு உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக இருந்து வரும் ரூபா 136,368 பெறுமதியான கடன் மீதி தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.5 ஆம் பிரிவின் பிரகாரம் அறவிடுவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

### 3.6 கணக்களிப்புப்பொறுப்பும் நல்லாளுகையும்

#### 3.6.1 உள்ளகக் கணக்காய்வு

அமைச்சு, பௌத்த அலுவல்கள் திணைக்களம் மற்றும் புத்தசாசன நிதியம் என்பன தொடர்பான 19 துறைகளை மேவுவுகை செய்யக்கூடிய வகையில் உள்ளகக் கணக்காய்வு திட்டமிட்டிருந்தது. மீளாய்வாண்டில் 5 உள்ளகக் கணக்காய்வு பரிசோதனைகள் மட்டும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்த செயற்றிட்டங்கள், அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பாகப் போதியளவில் உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

#### 3.6.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்கப் அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சினால் நிதியாண்டு முடிவுற்று 150 நாட்களுக்குள் செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வறிக்கை 2016 ஜூன் 30 ஆந் திகதியளவிலும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

**3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

அமைச்சில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒரு ஆண்டிற்குக் குறைவான காலமாக நிலவி வரும் தீர்வு செய்யப்படாத பொறுப்புக்கள் ரூபா 2,126,019 ஆக இருந்தது.

**3.8 இணக்கமிண்மைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுன் இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | |
| (அ) நிதிப் பிரமாணம் 94(1) | 451,021 | 05 செலவின விடயங்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்ட பின் சேமிப்புக்கள் ரூபா 451,021 ஐ மிகைத்து பொறுப்புக்களுக்கு உட்பட்டிருந்தது. |
| (ஆ) நிதிப் பிரமாணம் 371 | 292,000 | பதவிநிலைத் தர உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் செயல்நிமித்த உப கட்டுநிதி செலுத்த முடியுமாக இருந்த போதிலும், மதியுரையாளராக ஆட்சேர்க்கப்பட்ட வெளிநபரொருவருக்கு 2 சந்தர்ப்பங்களின் போது ரூபா 292,000 ஆன செயல்நிமித்த உப கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது. |

**3.9 செயலாற்றல்**

**3.9.1 பிரதான பணிகளுக்கு முரணான செயற்பாடுகள்**

அமைச்சினால் அதனது நோக்கத்திற்குரிய செயற்பாடுகளிலிருந்து விலகி செயற்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் தெரிவுப் பரிசோதனைகளின் அவ்வாறு வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் சில கீழே காட்டப்பட்டுள்ளன

(அ) ‘‘பௌத்த பக்தி கீதங்கள்’’ இற்காக அனுசரணை கொடுப்பனவு வழங்குதல்

தனியார் குழுவொன்றினால் வழங்கப்பட்ட ஆலோசனைக்கு இணங்க 2015 ஆம் ஆண்டு தேசிய வெசாக் கொண்டாட்டங்களுடன் இணைந்ததாக ‘‘பௌத்த பக்தி கீதங்கள்’’ நிகழ்ச்சிக்காக அமைச்சினால் அனுசரணைக் கொடுப்பனவாக ரூபா ஒரு மில்லியன்

வழங்கப்பட்டிருந்தது. பௌத்த பக்தி கீதங்களை இயற்றுவதற்காக மதிப்பிடப்பட்ட செலவினம் ரூபா 8,050,000 தொகையை உழைத்துக் கொள்வதற்கான செயற்பாடு அக்குழுவினால் அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், பாடலின் உரித்து தொடர்பாகவோ அல்லது வருமானம் அரசின் வருமானத்திற்கு வழங்குவது தொடர்பாக எந்தவொரு இணக்கப்பாட்டிற்கும் அமைச்சு வந்திருக்கவில்லை. அதன் பிரகாரம் தனியார் குழுவொன்றினால் வருமானத்தைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் செய்யப்பட்ட செயற்பாட்டிற்காக அமைச்சினால் அரசின் நிதி செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2015 ஆம் ஆண்டின் வெசாக் உற்சவம் தொடர்பில் பாடலை வெளியிடுவதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், பாடல் தொடர்பான எதிர்பார்க்கப்பட்ட இயற்றல் நடவடிக்கைகள் 2016 மே 31 ஆந் திகதி வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 ஆம் ஆண்டிற்காக பௌத்த தினப் பதிவேடுகள் அச்சிடப்பட்டு பகிர்ந்தளித்தல்

2015 ஆம் ஆண்டிற்காக 26,500 பௌத்த தினப் பதிவேடுகள் மற்றும் 12,500 அழைப்பு தினப்பதிவேடுகள் அச்சிடுவதற்காக புத்தசாசன அமைச்சினால் ரூபா 6,590,500 தொகையும் நாடளாவிய ரீதியில் அத்தினப் பதிவேடுகளை விநியோகிப்பதற்காக ரூபா 613,000 இற்கு அண்மித்த செலவினமொன்றும் மேற்காள்ளப்பட்டிருந்தது. இங்கு பௌத்த கலாசாரப் பெறுமதி மற்றும் தொடர்பான கண்காட்சிகளை நடாத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 2,250,000 தொகையான முழு நிதிஏற்பாடும் அதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் அமைச்சிற்கு நிச்சயிக்கப்பட்ட நோக்கமொன்றிற்காக வழங்கப்பட்டிருந்த நிதிஏற்பாட்டை ஆண்டின் ஆரம்பத்தின் போது முழுமையாக வேறொரு நடவடிக்கைக்காக பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.9.2 போதியளவு நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்

அமைச்சினால் பிரதான பணிகள் போதியளவில் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், அவ்வாறு அவதானிக்கப்பட்ட சந்தர்ப்பமொன்று கீழே காட்டப்பட்டுள்ளது.

**சமயப் பாடசாலை உதவி வழங்கல்**

மினுவங்கொடை பிரதேச செயலகத்திற்குரிய அதிகாரப் பிரதேசத்தின் விஹாரைகள் சில தொடர்பான தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

(அ) 2015 ஆம் ஆண்டில் சமயப் பாடசாலைகளுக்கு உதவிகள் வழங்குவதற்கு பொருத்தமான சமயப் பாடசாலை முன்னுரிமை பதிவேடு மற்றும் சமயப் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்ட உதவிகள் பதிவேட்டின் பிரகாரம் முன்னுரிமை பதிவேட்டில் உள்ள விஹாரைகளுக்கு உதவிகள் வழங்கப்படாமல் இருந்ததுடன் முன்னுரிமை பதிவேட்டில் இல்லாத சமயப் பாடசாலைகளுக்கு உதவித் தொகைகள் வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) பிரதேச செயலகங்களுக்கு இணைக்கப்பட்ட பௌத்த அலுவல்கள் இணக்கப்பாட்டு உத்தியோகத்தர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் போது நாளதுவரையாக, தேவைக்கேற்ற வகையில் செயன்முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக அந்த உத்தியோகத்தர்களின் கடமை பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் போது சிக்கல்கள் தோன்றியிருந்ததுடன் அவ்வாறு அச்சிக்கல்கள் தீர்வு செய்யப்படாமல் காலம் தாழ்த்தியதன் காரணமாக மேலும் வெவ்வேறு சிக்கல்கள் தோன்றியிருந்தமை அவதானிக்கப்பட்டன.

## 3.10 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

### 3.10.1 அரச வெசாக் உற்சவம் - 2015

2015 ஆம் ஆண்டின் வெசாக் உற்சவத்தை நடாத்துவதற்காக அனுசரணையாளர் களிடமிருந்தும் திறைசேரி மானியங்களாகவும் ரூபா 34,071,000 தொகை புத்தசாசன அமைச்சிற்கு கிடைக்கப்பெற்றிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதரிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரச வெசாக் உற்சவத்திற்கான செலவினத்தை மேற்கொள்வதற்காக 2015 ஏப்ரல் 15 ஆந் திகதிய குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ரூபா 21,071,000 தொகையான நிதிஏற்பாடு அமைச்சிற்கு கிடைக்கப் பெற்றிருந்தது. அந்நிதி ஏற்பாடுகளிலிருந்து கணக்காய்வு திகதி வரையிலும் ரூபா 7,935,236 தொகை எஞ்சியிருந்ததுடன் வெசாக் உற்சவத்திற்கான அனைத்து செலவினங்களும் அதுவரையில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அரச வெசாக் உற்சவத்திற்காக செலவின மதிப்பீட்டினைத் தயாரிக்கும் போதும் குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீட்டின் மூலமும் நிதிஏற்பாடு கோரும் போது மிகை மதிப்பீடொன்று இடம்பெற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) மேலும் அப்போதைய விடயத்திற்குரிய அமைச்சரால் மேற்கொள்ளப்பட்ட எழுத்துமூல வேண்டுகோளிற்கு இணங்க 4 அரச நிறுவனங்களிலிருந்து 2015 வெசாக் உற்சவத்திற்காக ரூபா 13,000,000 நிதி உதவிகள் கிடைக்கப் பெற்றிருந்தது. அரச வெசாக் உற்சவத்திற்காக அரசிடமிருந்து கிடைத்த நிதிஏற்பாடு போதியதாக இருந்தமையால் இம்மானியங்கள் செலவிடப்பட்டிருக்கவில்லை. அப்பெறுவனவுகள், அரச வருமானமாக கணக்கீடு செய்யப்படாமல் புத்தசாசன நிதியத்திற்கு வழங்கப்பட்டிருந்தது.

### 3.10.2 அமைச்சிற்காக இணயத்தளமென்றை தாபித்தல்

அமைச்சு மற்றும் அப்போதிருந்த அமைச்சின் கீழான 05 திணைக்களங்களுக்கும் இணையத்தளமொன்றை நிர்மாணிப்பதற்கு 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 3,807,000 கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவொன்று நியமிக்கப்பட்டு தேவையான தொழில்நுட்ப மாதிரிகள் தயாரித்துக் கொள்ளாமலும் அமைச்சின் கொள்வனவுக் குழுவின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமலும் தெரிவு செய்யப்பட்ட மூன்று வழங்குனர்களிடமிருந்து விலை விபரங்கள் பெற்றுக்கொண்டதன் பின்னர் அமைச்சின் செயலாளரினால் வழங்குனர் தெரிவுசெய்யப்பட்டிருந்தார்.

(ஆ) வழங்குனரால் அமைக்கப்பட்ட இணையத்தளம், மென்பொருள் தொழில்நுட்ப உத்தியோகத்தரினதோ அல்லது துறை தொடர்பான விசேடத்துவம் வாய்ந்த ஒருவரின் மேற்பார்வையொன்று இல்லாமல் ரூபா 804,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அமைச்சின் கீழான 05 திணைக்களங்களுக்காக இணையத்தளத்தை அபிவிருத்தி செய்வதற்காக முதல் வழங்குனருக்கு வழங்கி மேலும் ரூபா 3,003,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும் திணைக்களங்களுக்காக இணையத்தளம் நிர்மாணிக்கப்பட்டு கையளிக்கப்படாதிருந்ததுடன் அமைச்சிற்காக நிர்மாணிக்கப்பட்ட இணையத்தளமும் 6 மாதம் கடந்ததன் பின்னர் செயற்படாத நிலைமையொன்று உருவாகியிருந்தது.

## 3.11 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

-------------------------------------------------------------------

### 3.11.1 சமயப் பாடசாலைகள் மற்றும் விஹாரைகள் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக உதவி வழங்கல்

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

**புவக்பிட்டிய ரங்வல பஹன தேவாலயத்திற்காக வளவிற்காக பல்நோக்கு கட்டிடமொன்றை நிர்மாணித்தல்**

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

மேற்குறித்த கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக 2015 ஒக்தோபர் மாதத்தின் போது அமைச்சினால் ரூபா 1,000,000 நிதிஏற்பாடு ஹங்வெல்ல பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதாிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இக்கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கான திட்டத்திற்கு, குறித்த பிரதேச சபையிடமிருந்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) புகையிரத வீதிக்கு அண்மையில் கட்டிடமொன்று நிர்மாணிக்கப்படும் போது விடப்பட வேண்டிய இட எல்லைக்குள் இக்கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. களனிவெளி புகையிரத வீதி இரட்டை வீதியொன்றாக அபிவிருத்தி செய்வதற்கு திட்டமொன்று தற்போது செயற்படுத்தப்பட்டு வருவதாலும், நிர்மாணத்திற்குரிய காணி தாழ் நிலமாக இருப்பதாலும் காணி நில மீட்டல் ஆணைக்குழுவிடமிருந்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் இந்நிர்மாணம் ஆரம்பித்தல் சட்டரீதியானதல்லாததாக இருந்தது.

(இ) இக்காணிக்கு செல்வதற்காக வீதியொன்று அமைக்கப்படாமல் இருந்ததுடன் உதவிகள் வழங்கும் போது நிர்மாணத்திற்கு தேவையான அடிப்படைத் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்துள்ளதாக உறுதிப்படுத்தாமல் நிதி வழங்கப்பட்டிருந்தது.

### 3.11.2 தகவல் தொழில்நுட்ப பிரிவு மற்றும் புன்னியராம நிகழ்ச்சித்திட்டத்திற்காக மதியுரையாளர் நியமனம்

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

இது தொடர்பாக பின்வரும் அவதாிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அமைச்சினால் செயற்படுத்த வேண்டிய நிகழ்ச்சித்திட்டங்களை கூட்டிணைப்பதற்காக அமைச்சில் சேவையில் ஈடுபட்டுள்ள பதவிநிலைத் தர உத்தியோகத்தர்கள் இருக்கையில் மதியுரையாளராக முறையற்ற விதத்தில் ஆட்சேர்க்கப்பட்டிருந்த பிக்கு ஒருவருக்கு புண்ணியராம செயற்திட்ட நடவடிக்கைககள் அனைத்தும் கையளிக்கப்பட்டிருந்தன. மேற்குறித்த மதியுரையாளரால் சமர்ப்பிக்கப்பட்ட பற்றுச்சீட்டுக்கள் மற்றும் வேண்டுகோள் ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்த மதியுரையாளரான பிக்குவின் வங்கிக் கணக்கிற்கு ரூபா 3,424,404 தொகையும் மதியுரையாளரால் தலைமை பதவி வகிக்கும் தனியார் கம்பனியொன்றுக்கு ரூபா 761,277 தொகையும் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், அந்நடவடிக்கைகள் தொடர்பாக அமைச்சினால் முறையான மேற்பார்வையொன்று இடம்பெற்றிருக்கவில்லை.

(ஆ) அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளுக்கு முரணாக புண்ணியக்கிராம வெப் பிஹிதொர என்ற பெயரில் இணையத்தளமொன்றை நிர்மாணித்து பராமரித்துச் செல்வத்காக மேற்படி (அ) இல் குறிப்பிடப்பட்ட மதியுரையாளருக்கு ரூபா 1,505,202 தொகை முறையற்ற விதத்தில் கொடுப்பனவு

செய்யப்பட்டிருந்தது. இவ் இணையத்தளத்திற்குரிய தரவு முறைமைகள் அமைச்சிற்கு கையளிக்கப்படாதிருந்ததுடன், இணையத்தளம் செயற்படும் நிலைமையில் காணப்படவில்லை.

### 3.11.3 ஸ்ரீமத் அநகாரிக தர்மபால அவர்களின் 150 ஆவது பிறந்த தினத்தை கொண்டாடுதல - 2015

மேற்குறித்த செயற்பாட்டிற்காக ரூபா 1,000,000 ஆன நிதிஏற்பாடு 2015 இன் வருடாந்த மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அந்நிதிஏற்பாடுகளில் 2015 ஆம் ஆண்டின் போது செய்யப்பட்ட செலவினம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் கணக்காய்வுப் பரிசோதனைகளின் பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட ஸ்ரீமத் அநகாரிக தர்மபால அவர்களின் ஜனன தின வைபவத்திற்காகவும் பௌத்த இலக்கிய விழாவிற்காகவும் அகில இலங்கை பௌத்த சம்மேளனத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ரூபா 3,189,858 ஆன செலவின அறிக்கைக்காக ரூபா 2,000,000 தொகை புத்தசாசன அமைச்சினால் செலுத்தப்பட்டிருந்தது, முறைப்படி ரூபா 1,561,264 ஆன செலவினத்திற்காக பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், ரூபா 438,736 ஆன செலவினத்திற்காக பற்றுச்சீட்டு பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஸ்ரீமத் அநகாரிக தர்மபால அவர்களின் ஞாபகார்த்த விரிவுரையாளர் பயிற்சி செயற்திட்டத்தின் விரிவுரையாளர்களுக்கு வளவாளர் படிகளாக ரூபா 129,000 தொகையும் ஸ்ரீமத் அநகாரிக தர்மபால அவர்களின் சுயசரிதை விவரண திரைப்படத்தை தமிழ் மொழியில் ஒலிப்பதிவு செய்வதற்காக ரூபா 60,000 தொகையும் அவரின் 150 ஆவது வருட ஜனன தின தேசிய நிகழ்ச்சிக்கு 2015 ஆம் ஆண்டில் செலவிடுவதற்காக ரூபா 1,000,000 உமாக மொத்தம் ரூபா 1,060,000 தொகை அரச பல்கலைக்கழகமொன்றின் சேகரிப்புக் கணக்கிற்கும் பிக்கு ஒருவரின் பெயருக்கும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மேற்படி சேவைகள் பெற்றுக் கொள்வதற்கான பற்றுச்சீட்டுக்களுக்குரிய சேவை வழங்கல்கள் நிறுவனத்திடம் பெற்றுக்கொள்ளப்படாதிருந்ததுடன், அந்நடவடிக்கைகள் தொடர்பாக பின் தொடர் நடவடிக்கைகள் மேற்கெள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) புத்தசாசன அமைச்சு மற்றும் அரச பல்கலைக்கழகமொன்றும் இணைந்து 150 ஆவது அநகாரிக தர்மபால அவர்களின் ஞாபகார்த்த தேசிய நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டு 4 உப தலைப்புக்களின் கீழ் ‘‘எதிர்காலத்திற்காக அநகாரிக தர்மபால தொலைநோக்கு’’ என்ற பெயரில் ஆராய்ச்சி கட்டுரைப் போட்டியொன்று ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. இப்போட்டிக்காக பதிவுக் கட்டணமாக சார்க் நாடுகளின் ஆராய்ச்சியாளர்களிடமிருந்து 100 அமெரிக்க டொலர்களும், ஏனைய நாடுகளின் ஆராய்ச்சியாளர்களிடமிருந்து 200 அமெரிக்க டொலர்களும் உள்நாட்டு ஆராய்ச்சியாளர்களிடமிருந்து ரூபா 2,000 உமாக கட்டண சேகரிப்பு குறித்த பல்கலைக்கழகத்தின் தொலைத்தொடர்பாடல் கல்விப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்தது. புத்தசாசன அமைச்சினால் இந்நிகழ்ச்சித்திட்டத்திற்காக நிதிப் பங்களிப்பு வழங்கப்பட்டிருந்ததுடன், அந்நிகழ்ச்சித்திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு சேகரிக்கப்பட்ட மேற்படி பணம் தொடர்பாக எவ்வித அறிக்கையொன்றும் அமைச்சிற்கு பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.11.4 கம்பொல தொலுவ ஸ்ரீ பிம்பாராம விஹாரையின் சமயப் பாடசாலை கட்டிட நிர்மாணம்**

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------மேற்படி விஹாரையினால் நடாத்தப்பட்டு வரும் சமயப் பாடசாலைக்கான கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக தனியார் ஒப்பந்தக்காரரொருவருக்கு 02 கட்டங்களின் கீழ் மொத்தம் ரூபா 32,102,409 தொகையான பெறுமதி சேர் வரியுடன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இக்கொடுப்பனவு தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 3.2 வழிகாட்டலின் பிரகாரம் போட்டிக் கேள்வி கோரல் இல்லாமலும் அமைச்சின் கொள்வனவுக் குழுவின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமலும் இக்கட்டிட நிர்மாணத்திற்காக மதியுரையாளரொருவர் நியமிக்கப்பட்டிருந்தார். அவ்வாறே அமைச்சிற்கோ அல்லது விஹாரைக்கோ சட்டரீதியாக உரித்தில்லாத காணியில் இக்கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

(ஆ) கட்டிடம் நிர்மாணிப்பதற்கு முன்னர் முறைப்படி உரிய தரப்பினரிடமிருந்து இணக்கப்பாட்டிற்கு வராத காரணத்தினால் நிர்மாணத்தின் இடைநடுவில், திட்டம் மாற்றப்பட்டிருந்ததுடன் அதன் போது செயற்திட்டம் 2 கட்டங்களின் கீழ் பூர்த்தி செய்வதற்கு நேர்ந்திருந்தது. அதற்காக ரூபா 11,616,302 ஆன மேலதிக செலவினமொன்று செய்யப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் இக்கட்டிடத்தின் நீளத்தை ஆரம்ப திட்டத்தை விட 1/5 அளவில் அதிகரிப்பதற்காக ரூபா 11,616,302 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(இ) ஆரம்ப திட்டத்தின் பிரகாரம் கட்டிடத்தின் முதலாவது கட்டத்திக்காக ஒப்பந்தக்காரருக்கு ரூபா 18,633,092 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன், அத்தொகைக்கு கட்டிடத்தின் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. பிரதான கட்டிடத்தின் நீளத்தை 1/5 அளவினால் அதிகரிப்பதற்காக ரூபா 11,616,302 தொகை செலவிடப்பட்டிருந்தது. கட்டிடத்தின் 1/4 அளவிலான வேலையைப் பூர்த்தி செய்வதற்காக ரூபா 25,602,633 ஆன செலவினத்துடன், ஒப்பிடும் போது பின்னர் நிர்மாணிக்கப்பட்ட பகுதிக்கான செலவினம் அசாதாரணமானதாக நிலைமையொன்றாக அவதானிக்கப்பட்டது.

**3.12 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

---------------------------------------------------------------------------

**3.12.1 மிரிஸ்வட்டிய பிக்கு பயிற்சி நிலையம் மற்றும் அண்மித்த மதில் நிர்மாணம்**

-------------------------------------------------------------------------------------------------------------------------------------

புத்தசாசன அமைச்சினால் அநுராதபுரம் மிரிஸ்வட்டிய மஹா விஹாரையின் பிக்கு பயிற்சி நிலையம், பிக்குகள் விடுதி மற்றும் அண்மித்த மதில் நிர்மாண நடவடிக்கைகள் என்பன 2 கட்டத்தின் கீழ் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன், அதற்காக 2011 ஆம் ஆண்டிலிருந்து 2015 நவம்பர் மாதம் வரை ரூபா 32,494,501 தொகை செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டது.

(அ) அமைச்சினால் ரூபா 17,727,403 தொகை செலவிடப்பட்டிருந்த முதலாம் கட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடம் ஒப்பந்தம் முடிவடைந்ததன் பின்னர் மிரிஸ்வட்டிய ரஜமஹா விஹாரைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. எனினும் அங்கு பொருத்தப்பட்டிருந்த கதவுகள், இரும்பு மேவுகை மற்றும் கூரைப்பீலிகளில் பிழைகளை சீராக்குவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், ரூபா 992,734 ஆன நிறுத்தி வைத்தல் தொகை இரண்டு சந்தர்ப்பங்களில் ஒப்பந்தக் கம்பனிக்கு செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மிரிஸ்வட்டிய செயற்திட்டத்தின் இரண்டாவது கட்டமாக பிக்கு பயிற்சி நிலையத்திற்கு அண்மித்த பகுதியளவு பூர்த்தி செய்யப்பட்டிருந்த கட்டிடத்தின் எஞ்சிய பகுதியை பிக்குகளுக்கான தங்குமிடமாக அபிவிருத்தி செய்வதற்கும் கட்டிடம் அமைந்துள்ள காணியைச் சுற்றி மதிலொன்றை நிர்மாணிப்பதற்கும் திட்டமிடப்பட்டிருந்தது. அதற்குரிய ஒப்பந்த உடன்படிக்கை மற்றும் கொடுப்பனவுகளின் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) ரூபா 16,355,972 மதிப்பீட்டுப் பெறுமதியான செயற்திட்டத்தின் இரண்டாவது கட்டத்திற்காக கேள்வி கோரமல் முதலாவது கட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டிருந்த ஒப்பந்தக் கம்பனிக்கு நிர்மாண நடவடிக்கைகள் கையளிக்கப்பட்டிருந்தன.

(ii) பிக்கு பயிற்சி நிலையத்தினைச் சுற்றி மதில் நிர்மாணிப்பதற்காக ரூபா 2,640,792 தொகை செலவிடப்பட்டிருந்தது. பணியை ஆரம்பிப்பதற்கு முன்னர் அமைச்சினால் காணியின் உரித்து தொடர்பாக கருத்திற் கொள்ளாததன் காரணமாக இச்செயற்பாடு இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தது.

## 3.13 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினரின் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 16 | 10 | 06 |
| (ii) | மூன்றாம் நிலை | 02 | 0 | 02 |
| (iii) | இரண்டாம் நிலை | 140 | 79 | 61 |
| (iv) | ஆரம்ப நிலை | 36 | 33 | 03 |
| (v) | ஏனையவை (அமைய/ தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | 04 | 04 | 0 |
| | மொத்தம் | 198 | 126 | 72 |